[2002 மே 3

வசதி பெறுவதற்கான நல்ல திட்டங்களை அங்கு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அரசு வகுத்து வருகிறது. அது விரைவிலே நடைமுறைப்படுத்தப்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 283, திரு. தி. வேல் முருகன், மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர்.

283—

குடிநீர்த் தேக்கத் தொட்டி

***1644—திரு. தி. வேல் முருகன்:**

மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

கடலூர் மாவட்டம், கடலூர் வட்டம், கேசவநாராயணபுரம் காலனிக்கு மேல்நிலை குடிநீர்த் தேக்கத் தொட்டி அமைக்க அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. சி. துரைராஜ், உள்ளாட்சித் துறை அமைச்சர் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

கடலூர் மாவட்டம் முழுமையாக குடிநீர் திட்டப் பணிகள் ராஜீவ் காந்தி தேசிய குடிநீர் மற்றும் சுகாதார திட்டத்தில் வருவதால் மாண்புமிகு உறுப்பினர் குறிப்பிட்ட கேசவநாராயணபுரத்திற்கு தனியே தொட்டி கட்டுவதற்கு, நான் சொன்ன ராஜீவ் காந்தி திட்டத்திற்கு மக்கள் பங்களிப்புத் தொகை கட்டுவார்களேயானால், அங்கே தனியே தொட்டி கட்டுவதற்கு அரசு ஆவன செய்யும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. தி. வேல் முருகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடலூர் மாவட்டம், பண்ருட்டி சட்டமன்றத் தொகுதிக்கு உட்பட்ட கேசவநாராயணபுரம் காலனி மக்களுக்கு புதிய போர்வெல்லுடன் கூடிய குடிநீர் மேல்நிலைத் தொட்டி கேட்டு நான் வினா எழுப்பியிருந்தேன். ஆனால், இந்த வினா புதிய மேல்நிலைத் தொட்டிக்கு மட்டும் வந்திருக்கிறது. இருந்தாலும்கூட அந்த கேசவநாராயணபுரம் காலனி மக்கள் அன்றாடம் விவ்சாய மற்றும் கூலிகளாக வேலை செய்யக் கூடிய மக்கள். அந்த மக்களுக்கு நம்முடைய மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொல்வது போல், ராஜீவ் காந்தி திட்டத்தின்கீழ்

2002 மே 3]

மக்கள் பங்களிப்புடன் கூடிய பணத் தொகையைக் கட்டி, அந்த ஊருக்கு குடிநீர் வசதி செய்துகொள்ள முடியாத ஒரு சூழ்நிலையில் வாழ்கிற ஆதிதிராவிடர், ஏழை மக்கள், தினக்கூலி மக்களாக அவர்கள் இருக்கின்றார்கள். ஆதலால், மாண்புமிகு அமைச்சர் அவர்கள், நம்முடைய தமிழக அரசினுடைய சார்பாக அந்த ஏழை மக்களுக்கு ராஜீவ் காந்தி குடிநீர் திட்டத்தின்கீழ் வராமல், தமிழ்நாடு அரசு குடிநீர் வடிகால் வாரியத்தின் மூலமாகவோ அல்லது வேறு ஏதாவது ஒரு திட்டத்தின் மூலமாகவோ, அந்த மக்களுக்கு குடிநீர் வழங்குவதற்கு நம்முடைய அரசு முயற்சி எடுக்குமா என்பதை தங்கள் வாயிலாக கேட்டு அமர்கிறேன்.

மாண்புமிகு திரு. சி. துரைராஜ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்ட கேசவநாராயணபுரம் பகுதியில், ஏற்கெனவே தம்பிப்பேட்டை என்கிற ஊராட்சியில் பொதுமக்களுடைய பங்களிப்போடு ராஜீவ் காந்தி குடிநீர்த் திட்டத்தின் மூலமாக, மேல்நிலை நீர்த் தேக்கத் தொட்டி கட்டப்பட்டு வருகிறது. அந்தத் திட்டத்தின் மூலமாக கேசவநாராயணபுரம் பகுதிக்கு, குழாய்கள் பதித்து, தண்ணீர் விடுவதற்கு வேண்டிய வேலைகள் எல்லாம் நடைபெற்று கொண்டிருக்கின்றன. வேலைகள் விரைவாக நடந்து முடிகின்றபோது நிச்சயமாக கேசவநாராயணபுரம் பகுதி மக்களுக்கு போதுமான அளவு குடிநீர் வழங்கப்படும் என்பதைப் பணிவுடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 284, திரு. என். ரெங்கநாதன், மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர்.

284—

புதிய பேருந்து நிலையம்

***2733—திரு. என். ரெங்கநாதன்:**

மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பூம்புகார் தொகுதி, தரங்கம்பாடி பேரூராட்சியில் புதிய பேருந்து நிலையம் அமைக்க நிலம் கையகப்படுத்தப்பட்டுள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது பேருந்து நிலையம் அமைக்கப்படும்?